அரசு கருத்துருக்களைக் கேட்டது. ஆனால், நமது Advocate General அவர்களும் மற்றும் சட்டத் துறையும் அதற்கு வாய்ப்பில்லை என்று கருத்து தெரிவித்ததன் அடிப்படையில், இந்த மோட்டார் வாகனச் சட்டம் மத்திய அரசினுடைய மோட்டார் வாகனச் சட்டப் பிரிவின்படி இயக்கப்படுகிறது என்கிற காரணத்தால் மத்திய அரசின் அந்த மோட்டார் வாகனச் சட்டப்படி உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றாலும் அதற்கு வாய்ப்பில்லை என்று கருத்துத் தெரிவித்ததன் அடிப்படையில் உச்ச நீதிமன்றத்தில் அதற்காக நாம் மேல்முறையீடு செய்யவில்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் க. பொன்முடி.

டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உச்ச நீதிமன்றத்திற்குச் செல்வதற்கு, A.G. அவர்கள் ஒப்புதல் அளிக்கவில்லை என்று கூறியிருக்கிறார். பல்வேறு நிலைகளிலே—சாலைப் பணியாளர்கள் சென்றபோது உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறோம். அதுபோல, இதிலும் பொதுமக்கள் நலன் கருதி, தனியார் பேருந்துகளை நிறுத்துவதற்கு உச்ச நீதிமன்றத்திற்குச் செல்வதற்கான முயற்சிகளில் அமைச்சர் அவர்கள் ஈடுபடுவார்களா எனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு சட்டத் துறையும் நமது Advocate General-ம் ஒப்புதல் வழங்கவில்லை என்கிற காரணத்தால், அதற்கு வாய்ப்பே இல்லை என்று இறுதியாக அவர்கள் கருத்துத் தெரிவித்ததன் அடிப்படையில் அதற்குத் தேவை எழவில்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *49*, திரு. லா. சந்தானம், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

49—

பேருந்து வசதி

***38770—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2005 பிப்ரவரி 7]

மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து கொடிக்குளம் செல்லும் பேருந்தை நத்தப்பட்டி வழியாக இயக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து கொடிக்குளம் செல்லும் பேருந்தை நத்தப்பட்டி வழியாக இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நத்தப்பட்டி என்கிற கிராமம் பல காலங்களாக சாலை வசதி இல்லாத ஒரு கிராமமாக இருந்தது. தற்போது பிரதம மந்திரி வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலமாக மிகச் சிறப்பான சாலை அந்தக் கிராமத்திற்கு அமைக்கப்பட்டிருக்கிறது. அதோடுகூட கொடிக்குளம் செல்கின்ற பேருந்து தற்சமயம் செல்கின்ற வழியில் எந்தக் கிராமமும் விட்டுப் போகாத அளவிற்கு ஒரு furlong தூரம் அதிகமாகச் சென்றால், இந்தக் கிராமத்தைத் தொட்டுச் செல்கின்ற ஒரு நிலை ஏற்படுகின்றது. அந்தக் கிராமத்தினுடைய ஜனத்தொகை ஏறக்குறைய 2,000 மக்களுக்குமேல் இருக்கிறார்கள். எனவே, அந்தக் கிராமமும் பயன்படுகின்ற நிலையும் இருக்கும், அதோடு அரசுப் பேருந்திற்குக் கூடுதலாக வசூலும் வருகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுமென்கின்ற காரணத்தினால் வருகின்ற காலத்தில் அதைப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை பெரியார் நிலையத்திலிருந்து நத்தப்பட்டி வழியாக கொடிக்குளம் வரை செல்கின்ற வழித்தடத்தின் தூரம் 30.9 கி.மீ. என்ற அளவிற்கு உள்ளது. 30 கி.மீ. க்கு மேல் நகரப் பேருந்து இயக்குவதிலே இருக்கின்ற விதிமுறைகளைத் தளர்த்தி அதற்கு வேண்டுமானால் 0.9 கி.மீ. மட்டுமே கூடுதலாகியிருக்கின்ற காரணத்தினால் அதைப்பற்றி தளர்த்துவதற்கு வழிமுறைகள் உண்டா என்பதை ஆராய்ந்து அதற்கு வாய்ப்பு இருக்குமேயானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிவுடன் பரிசீலிக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2005 பிப்ரவரி 7

திரு. லா. சந்தானம்: தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும் என்று கூறிய அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்றைக்கு பல்வேறு கிராமங்களுக்கு நமது அரசினுடைய சிறப்பான செயல் திட்டத்தின் மூலமாக கிராமியச் சாலைகள், பிரதம மந்திரி வேலைவாய்ப்புத் திட்டங்கள் போன்றவற்றிலே நல்ல சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு போக்குவரத்தைத்தான் மக்கள் பெரிதும் வேண்டுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, அப்படி புதிதாக நல்ல சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்ற கிராமங்களுக்கு போக்குவரத்து வசதிகள் தேவை என்கின்ற நிலை உருவாகியிருக்கின்ற காரணத்தினால், வருகிற ஆண்டில் அரசு புதிதாக பேருந்து வாங்குகின்ற நிலையை எடுத்திருக்கின்ற இந்த நேரத்தில் சில பேருந்துகளையாவது, தொகுதிக்கு 1, 2 என்று—எல்லாத் தொகுதிகளிலும் இந்தத் தேவை இருக்கிறது -- அப்படி ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு பேருந்தையாவது ஒதுக்கி புதிய வழித்தடங்கள் நடத்துவதற்கு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய பேருந்துகள் இயக்குவதற்கு தடை ஒன்றுமில்லை. அதனால் அதற்கு விதிவிலக்கு அளிக்க வேண்டிய அவசியம் எழவில்லை. ஆனால், தேவை என்று கருதினால் பொதுமக்களுடைய தேவையின் அடிப்படையில் அதாவது கிராமத்திற்கு புதிதாக பேருந்து வசதியே முற்றிலும் இல்லாத கிராமத்திற்கு, அதற்கு சாலை வசதியும் இருக்குமேயானால் அப்படிப்பட்ட கிராமங்களுக்கு புதிய வழித்தடங்களில் பேருந்து வசதி கேட்டால், அந்தக் கிராமங்களுக்கு எல்லாம் போதிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்கெனவே ஆணையிட்டிருக்கிறார்கள். அவர்களுடைய ஆணையின் அடிப்படையில் தேவைக்கேற்ப, சூழ்நிலைக்கேற்ப ஆராய்ந்து, ஆய்வு செய்து, தேவை ஏற்பட்டால் புதிய வழித்தடங்களில், புதிய பேருந்துகள் இயக்குவதற்கு அரசு பரிவுடன் பரிசீலிக்குமென்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 50, திரு. எம்.எஸ். சந்திரசேகரன், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.